







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்


தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி



மலர் 1 இதழ் 42 15.10.2025



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

# படித்து பின்பற்ற வேண்டிய
# முத்துக்கள்
# உபதேசங்கள்



# முத்துக்கள்

கிருஷ்ண பரமாத்மா உத்தவரிடன் சொன்னார்: "நான் போனதும் துக்கப் படாதே, ஆனால் இந்த மனிதர்களின் உலகில் சென்று உன்னால் முடிந்த போதெல்லாம் தர்மத்தைக் கற்றுக் கொடு. நான் போனதும் தர்மம் இந்த பூமியை விட்டு வெளியேறும், அது இன்னும் மனிதர்களின் உலகில் உயிருடன் இருப்பதைப் பார்ப்பது உங்கள் மற்றும் உங்களைப் போன்றவர்களின் பொறுப்பாகும். பூமியில் அதை நிலைநிறுத்த நான் மிகவும் சிரமப்பட்டேன், நான் போனதும் நீ இந்த செடியைப் பராமரித்து வளர்க்க வேண்டும்."

***********************************************************

1. வேதங்களைக் கொண்டு நாரணனை அறிவது, நாரணனை நான்மறையால் நான் கண்டேனே என்றார் தேசிகன்.

2. கலக்கங்களைத் தீர்ப்பது வேதாந்தம் ஒன்றுதான். அதில் கலக்கம் வந்தால் வேதாந்த தேசிகரைத்தான் நாட வேண்டும்.

3. நாராயணனே பரன் என்று காட்டுகின்றது புருஷ ஸூக்தம்

4.திருவஷ்டாக்ஷரம் சிறந்த திருமந்த்ரம். மூல மந்த்ரம் என்றும் கூறுவர்.

5. ப்ரணவம் அகாரம் உகாரம் மகாரம் என்ற மூன்று எழுத்துக்களால் ஆகியதும் ஒரு எழுத்தாய் விளங்குவதும், இது சேர்ந்தால்தான் மற்ற மந்த்ரங்களும் வைதிகமாகும்.

6. அ என்று எழுத்திற்குப் பொருள் காப்பாற்றும் கடவுளான விஷ்ணு என்பது.

7. நாராயணன் பரத்வம் என்பதை நாராயணானுவாகம் என்கிற வேதபாகத்தால் தெளியலாம்.

8. தாயாரும்,பெருமாளும் நமக்கு ப்ரதானர்கள், விஷ்ணு பத்நீ என்பது லக்ஷ்மிக்குப் பெருமை. சரியப்பதி என்பது பெருமாளுக்குப் பெருமை (தம்பத்தைவதம்)

9. லோகப்ரதானன் என்று நாராயணன் ஒருவனையே கூறுவது.
பவித்ரங்களுக்கெல்லாம் பவித்ரம், மங்களங் களுக்கெல்லாம் மங்களம்.
தெய்வங்களுக்கெல்லாம் தெய்வம் என்றபடியால் இவனே லோகப்ரதானன்.

10. ப்ரணவத்தைக் கொண்டே ஜீவன் பசுவானுக்கு தாஸபூதன் என்று அறியலாம்.

*************************************************************

ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்கள் வாழ்நாள் முடிவில் அடைய விரும்பும் இடம் பரமபதம் என்பது. தங்கள் விதி வகையால், பரமபத நாதனின் ஸ்தானத்துக்கு அருகில் நின்று, அவனுக்கு அத்தாணி கைங்கர்யம் செய்யும் பாக்யம் பெறுவதே ஜீவன்களின் வாழ்க்கைக் குறிக்கோள். எட்டு ஆழ்வார்கள், 36 பாசுரங்கள் மூலம் பரமபதம் என்ற திருநாட்டை மங்களாஸாசனம் செய்துள்ளார்கள்.

பூலோகத்துடன் கலக்காத இத் திருப்பதியில், பரமபத நாதன், பெரிய பிராட்டியுடன் வீற்றிருந்த கோலத்தில் அநந்தாங்க விமான நிழலில் ஸேவை தருகிறார். இந்த க்ஷேத்ரத்தின் நதி, விரஜா நதி என்பது. ஆதிசேஷன், கருடன், விஷ்வக்ஸேனர் முதலிய நித்ய சூரிகளுக்கும், முக்தர்களுக்கும், இந்த திவ்ய தம்பதிகள் ப்ரத்யக்ஷமாக உள்ளனர். பகவானுடைய ஐந்து நிலைகளான பர, வ்யூஹ, விபவ, அர்ச்சை, அந்தர்யாமி ஆகியவைகளில், முதலாவதான பரத்வம் நிறைந்து நிற்குமிடம் பரமபதம். "விஷ்ணோ பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:" என்று வேதமும், இப் பரமபத நாதனை ஸேவித்துக் கொள்கிறது.

*****************************************************************

அயமிந்த்ர வ்ருஷாகபி: பரஸ்வந்தம் ஹதம் விதத் அஸிம் ஸூநாம் நவம் சருமாதேதஸ்யாந ஆசிதம்

விச்வஸ்மாதிந்த்ர: உத்தர: ||  -- ருக் வேதம் 10.86.18

(கருத்து): ஹே ஆத்மாவே! மனதாகிற குரங்கு, ஒரு கத்தி, ஒரு அடுப்பு, ஒரு சட்டி, ஒரு வண்டி நிறைய எண்ணெய் எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு, அவைகளைக் கொண்டு, தன்னை அழித்துக் கொள்ளக் கூடிய வியாபாரங்களில் இறங்கத் தயாராகி நிற்கிறது. ஆத்மா ராமனே, எல்லாவற்றிற்கும் பிரபு. அவன் தான் இந்த விபரீத ஈடுபாடுகளிலிருந்து, தொண்டர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்வது. "புலனைந்து மேயும் பொறியைந்தும் நீங்கி, நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்ற கருத்துடன் கலந்தது. அவன் விச்வஸ்மாதிந்த்ர: உத்தா: (He is Superior over all) என்று சொல்வது "அசுரரை அலமந்து வீய

**செற்றான், பலம் உந்து சீரில்" பெரியவன் என்ற பாசுரப் பகுதியைச் சேர்ந்தது. அசுரர்களை ஹதம் செய்வது போல், பஞ்சேந்த்ரியங்களின் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுவான் என ஆழ்வார் சொன்னார்.**

**********************************************************************

சாந்தோக்ய உபநிஷத் அர்ச்சிராதி மார்க்க யாத்ரையை பின் வருமாறு விவரிக்கிறது:

**अथ यदु चैवास्मिन् शव्यं कुर्वन्ति यदि च नार्चिषमेवाभिसम्भवन्ति अर्चिषोऽहः अह्न आपूर्यमाणपक्षम् आपूर्यमाणपक्षात् यान्षड्डदङ्केति मासासस्तान् मासेभ्यः संवत्सर संवत्सरादादित्यमादित्याच्चन्द्रमसं चन्द्रमसो विद्युतं तत्पुरुषोऽमानवः स एनान् ब्रह्म गमयत्येष देवपथो ब्रह्मपथ एतेन प्रतिपद्यमाना इमं मानवमावर्तं नावर्तन्ते नावर्तन्ते ॥**

அத யது ச ஏவ அஸ்மிந் சவ்யம் குர்வந்தி யதி சந,அர்சிஷமேவ அபிஸம்பவந்தி
அர்சிஷோ'ஹ: அக்ந: ஆபூர்யமாணபக்ஷம், ஆபூர்யமாண பக்ஷாத், யாந் ஷடுதங்ஙேதி
மாஸாகும் ஸ்தாந், மாஸேப்ய: ஸம்வத்ஸரகும் ஸம்வத்ஸராத் ஆதித்யமாதித்யாத் சந்த்ரமஸம்
சந்த்ரமஸோ வித்யுதம் தத் புருஷ: அமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி எஷ தேவபதோ
ப்ரஹ்மபத எதேந ப்ரதிபத்யமாநா இமம் மாநவம் ஆவர்தம் நாவர்தந்தே நாவர்தந்தே **-சாந்தோக்ய உபநிஷத் 4-15-5**

(கருத்து):

முமுக்ஷுவின் அந்திம கிரியைகளை புத்ராதிகள் செய்தாலும், செய்யாவிட்டாலும், அவன் அர்ச்சிராதி மார்க்கதிலேயே செல்கிறான். முதலாவதாக அக்னி வழி நடத்தி, பகல் தேவதையிடம் கொண்டு வந்து விடுகிறார். அடுத்தபடியாக சுக்ல பக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரம். ஆதித்யன், சந்திரன், வித்யுத் (மின்னல்) என்ற கிரமப்படி, ஆதிவாஹிகர்கள் வழி நடத்துகிறார்கள். தேவபதம் அல்லது அர்ச்சிராதி

மார்க்கம் என்ற இந்த வழியில் செல்பவர்கள் ஜனன மரணத்துடன் சேர்ந்த ஸம்ஸார உலகத்திற்கு ஒரு போதும் திரும்புவதில்லை.

ஆதிவாஹிகர்கள் வழி நடத்தி, எதிர் உபசாரம் கொண்டு,முமுக்ஷு என்ற முக்த ஜீவன் ஸ்ரீ வைகுண்டத்திற்கு அழைத்துப் போகப் படுவது வேதம் விளக்கியது என்பதை,

“ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத்”

என்ற ப்ரஹ்ம்ம ஸூத்ரம் குறிப்பிட்டது.
இந்த யாத்திரை நொடிப் பொழுதில் முடிவடைகிறது என சாந்தோக்ய உபநிஷத் தெரிவிக்கிறது. மின்னல் பாயும் வேகத்தில், மின்னல் தேவதை (அமாநவன்) என்ற ஆதிவாஹிகனால சூக்ஷ்ம சரீரம் பெற்ற ஜீவன் ஸ்ரீ வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதை,

“வைத்யுதேநைவ ததஸ்தச்ச்ருதே”

என்ற ப்ரஹ்ம ஸூத்ரம் விளக்குகிறது. சாந்தோக்ய, முண்டக, ப்ரச்நோபநிஷத்துக்கள், மின்னல் தேவதை முக்த ஜீவனை ஸ்ரீமந் நாராயணனின் ஸந்நிதானத்திற்கு அழைத்துச் செல்வதை பல இடங்களில் சொல்லுகின்றன. ஸ்ரீவைகுண்டத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீமந் நாராயணனின் சபையில் முக்த ஜீவன் நுழைவதை,

“ப்ரஜாபதே: ஸபாம் வேச்ம ப்ரபத்யே”

என்று சாந்தோக்யோபநிஷத் குறிப்பிட்டது. யஜுர் வேதமும்.

**यत्र देवा अमृतमानशानास्तृतीये धामन्नध्यैरयन्त**

யத்ர தேவா அம்ருதமாநசாநாஸ்த்ருதீயே
தாமந்நத்யையந்த

என்று சொல்லி, முக்த ஜீவன் பரமபத நாதனை அடைந்து, நித்ய சூரிகளின் கோஷ்டியில் கலந்து, ஸ்வதந்த்ரத்துடன், சஞ்சரிக்கிறது என்று சொல்லியது.

तद दूरे तद्वन्तिके

என்று ஈசாவாஸ்ய உபநிஷத் சொல்லும் வகையில், பரமபத நாதன் அருகிலும், வெகு தொலைவிலும் உள்ளான். முக்த ஜீவனுக்கு அருகிலும் ஸம்ஸாரிகளாய் உழல்பவர்களிடமிருந்து வெகு தூரத்திலும் பகவான் இருக்கிறான்.

முக்த ஜீவன் ஸ்ரீவைகுண்டமடைந்து, பரஞ்ஜ்யோதியை அணுகி, நித்யசூரி குழாங்களுடன் கலந்து, தன் ஸ்வரூப விசேஷத்துடன் ஸஞ்சரிக்கிறது என்று சாந்தோக்ய உபநிஷத்தும் சொல்கிறது.

*********************************************************************

